# மாலைக்கதிர்
Maalaikkathir








சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 11 செவ்வாய்க்கிழமை 25.06.2024 கதிர் 282


# நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என கடந்த வருடம் உரையாற்றிய ஜனாதிபதி இம்முறையும் அதனையே மக்களுக்குக் கூற முற்படுகின்றார்!

## இவ்வாறு பாசாங்கு செய்வதில் அர்த்தமில்லை என்கிறார் மரிக்கார் எம்.பி.

**இலங்கை திவாலான நாடா இல்லையா என்பதை ஜனாதிபதியால் அறிவிக்க முடியாது எனவும் சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனமே அதனை உறுதிப்படுத்த முடியும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.**

2➤



## ஆசிரியர் மற்றும் அதிபர் சம்பள முரண்பாடுகளை களையுமாறு கோரி நாளை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு!

### ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கக் கூட்டணி அறிவிப்பு

ஆசிரியர் மற்றும் அதிபர் சம்பள முரண்பாடுகளுக்கு தீர்வைக் கோரி நாளை (26) சுகயீன விடுமுறையை அறிவித்து விட்டு நாடளாவிய ரீதியில் கொழும்புக்கு வந்து பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கக் கூட்டணி தீர்மானித்துள்ளது.

இதன்படி நாளை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரே ஆசிரியர் - அதிபர் கூட்டணியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதுடன், தமது கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் தொடர்ச்சியாக தொழிற்சங்க போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப்



ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடுகளை களைய சுபோதனி கொமிட்டி

2➤

## மரணித்த கடற்படைச் சிப்பாய்க்கு யாழ். மாவட்ட மீனவர்கள் இரங்கல்

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறிய இந்திய மீனவர்களை இழுவைப்படகுடன் கைது செய்ய முற்பட்டபோது இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தமை துன்பியல்சம்பவம் என்று யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் ஸ்ரீ கந்தவேல் புனித பிரகாஷ் தெரிவித்தார்.



யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்திய இழுவைப் படகுகள் எமது கடல் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தைத் தொடர்ச்சியாக அழித்து வருகின்றது.

இதன் காரணமாக நாம் இலங்கைக் கடற்படையினருக்குப்பல்வேறு அழுத்தங்களை வழங்கி வரும் நிலையில், எங்களது வாழ்வாதாரத்தைக் காப்பாற்றுவதற்காக அத்துமீறும் இந்திய மீன்பிடியாளர்களை அவர்கள் கைது செய்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் இன்று அதிகாலை இந்திய இழுவைப் படகைக் கைது செய்ய முற்பட்டபோது கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நமது வாழ்வாதாரத்தைக்காப்பாற்றுவதற்காக இந்திய மீனவர்களுடன் போராடிய அந்தக் கடற்படைச் சிப்பாய்க்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கடற்படைச் சிப்பாய் உயிரிழந்துள்ள நிலையில் எவர் பக்கமானாலும் உயிர் இழப்பை நாம் விரும்பவில்லை.

இந்திய மீனவர்களிடம்நாங்கள் விநயமாகக் கேட்டுக்கொள்வது என்னவெனில், உங்கள் கடல் எல்லையைத் தாண்டி எங்கள் கடல் எல்லைக்கு வர வேண்டாம். அவ்வாறு நீங்கள் வருவதால் கடற்படையினர் உங்களை விரட்டுவதற்காகக் கடலில் போராட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. இதன் காரணமாக தேவையற்ற சம்பவங்கள் கடலில் இடம்பெறுகின்றன” - என்றார். (05)

## உச்ச நீதிமன்றம் தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து பாரதூரமானது

### மக்கள் விரோத அரசை விரட்டுவோம் என்கிறார் ஜீ.எல்.பீரிஸ் எம்.பி.



உச்ச நீதிமன்றம் என்ன கூறினாலும் அவற்றைநாடாளுமன்றம் தூக்கி எறியலாம் என தற்போதைய ஜனாதிபதி கூறியிருப்பது பாரதூரமான கருத்தாகும் என சுதந்திர மக்கள் சபை உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று (24) தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் சபையின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பீரிஸ் எம்.பி, உச்ச நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளை விசாரிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி மேற்கொள்கின்ற முயற்சியை வன்மையாகக் கண்டிப்பதாகவும், அது உச்ச நீதிமன்றத்தின் சுயாதீனமான தன்மைக்கு பேரிடியாக அமையும் எனவும் தெரிவித்தார்.

உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்ற தெரிவுக் குழுவிற்கு அழைப்பதற்கு எடுக்கும் முயற்சிக்கு எதிராக செயற்படப் போவதாகவும் குறிப்பிட்ட அவர், நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் மீதும், நீதித்துறையின் மீதும் செல்வாக்கு செலுத்தும் செயலை நிறைவேற்று அதிகாரம்மேற்கொள்கிறது எனவும், மக்களின் வாக்களிப்பு உரிமையை காத்து இந்த மக்கள் விரோத அரசை விரட்டியடிக்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் எனவும் அவர் கூறியதுடன், சட்டங்களை இயற்றுவது நாடாளுமன்றத்தின் கடமை என்ற போதிலும் அடிப்படை மனித உரிமைகளுக்கு உட்பட்டவாறே எந்தவொரு சட்டத்தையும் உருவாக்க முடியும் எனவும் மேலும் தெரிவித்தார்.

(ரென-76)

## கைது செய்ய வந்த இலங்கை கடற்படைச் சிப்பாயை கடலில் தள்ளிக் கொலை செய்த இந்திய மீனவர்கள்

யாழ்ப்பாணத்தில் இந்திய மீனவர்களின் தாக்குதலுக்கு இலக்கான கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில்கடமையாற்றும்ரத்நாயக்க எனும் கடற்படைச் சிப்பாயே உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் இன்று அதிகாலை கடலில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அதன்போது நெடுந்தீவு கடற்பரப்பை அண்டிய பகுதியில் படகொன்றில் அத்துமீறி நுழைந்து இந்திய மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளதை அவதானித்து அவர்களைக் கைது செய்யக் கடற்படையினர் முயன்றனர்.

கடற்படை படகில் இந்திய மீனவர்களின் படகுக்குச் சென்ற கடற்படைச் சிப்பாய்கள் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல் மேற்கொண்டனர். அதன்போது கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்த நிலையில் கடலில் வீழ்ந்து உயிரிழந்தார்.

அதையடுத்து மேலதிக கடற்படையினர், இந்திய மீனவர்களின் படகு நின்ற இடத்துக்குச் சென்று படகில் இருந்த 10 மீனவர்களையும் கைது செய்து கடற்படைப் படகில் ஏற்றினர்.

கைது செய்யப்பட்ட 10 மீனவர கனும், அவர்களின்

2➤

## நாடு இயல்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு வங்குரோத்து நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டுள்ளதாக விசேட அறிக்கையொன்றை வெளியிட ஜனாதிபதி தயாராகி வருவதாகவும் குறிப்பிட்ட மரிக்கார் எம்.பி., "கடந்த மார்ச் மாதம் 21 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி, நாடு திவால் நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டதாக அறிக்கை வெளியிட்டார். இவ்வாறு மக்களுக்கு உரையாற்றி விட்ட, பின்னர் 'வற்' வரியை அதிகரித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் அறிவித்தார். தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டன. மின் கட்டணம் அதிகரித்தது. நீர் கட்டணம் அதிகரித்தது. மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டது" என்றார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "நாடு திவாலாகிவிட்டதா இல்லையா என்பதை ஜனாதிபதியோ நாடாளுமன்றமோ கூற முடியாது. கடன் தரப்படுத்தல் நிறுவனமே அதனை கூற முடியும். கடன் தரப்படுத்தல் நிறுவனத்தின் கூற்றின்படி, இலங்கை இன்னமும் முழுமையாக கடனை செலுத்தாத நிலையில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது.

ஆகையால், நாடு திவாலாகவில்லை என பாசாங்கு செய்வதில் பயனில்லை. நாடு திவால் நிலையிலிருந்து விடுபட்டிருந்தால் மக்கள் படும் கஷ்டங்கள், பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் ஏற்படும் சிரமங்கள், ஓய்வூதியம் பெறுவோர் முகம் கொடுக்கின்ற சிரமங்கள் அனைத்தும் நீங்கியிருக்க வேண்டும்" என்றார். (ரென-74)

## கைது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படகுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த கடற்படைச் சிப்பாயின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கடற்படையினரும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

## ஆசிரியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிக்கையின் பரிந்துரைகளில் மூன்றில் ஒரு பங்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கைப் பெறுவதற்காகவே மேற்படி தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஸ்டாலின் மேலும் தெரிவித்துள்ளார். (ரென-75)

## போதைப்பொருள் விற்பனை ஆசிரியையும் கணவரும் கைது

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்தார் எனக் கூறப்படும் அநுராதபுரம் பகுதியில் உள்ள அரச பாடசாலையொன்றின் ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார். மேற்படி ஆசிரியை தனது கணவருடன் இணைந்து ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது. விற்பனைக்காக வைத்திருந்த ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள ஆசிரியையும், அவரின் கணவரும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (05)

## அரசமைப்புடன் விளையாட எவருக்கும் அனுமதி இல்லை

**உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடக்கும் தான் வெற்றி பெறுவதும் உறுதி என்கின்றார் விஜயதாஸ**

"ஜனாதிபதித் தேர்தலை பிற்போட எவருக்கும் இடமளிக்கமாட்டோம். அரசமைப்புடன் விளையாட எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது" - என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது-

"ஜனாதிபதித் தேர்தலில் நான் நிச்சயம் போட்டியிடுவேன் என்பதுடன் அதில் வெற்றி பெறுவதும் உறுதி. அவ்வாறு வெற்றி பெற்ற பின்னர் எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகள் எல்லாம் அரசமைப்பின் பிரகாரம் வலுவற்றதாகிவிடும். இதனால் கட்சித் தலைமைத்துவம் தொடர்பிலும் பிரச்சினை எழாது.

ஜனாதிபதித் தேர்தலை பிற்போட எவருக்கும் இடமளிக்கமாட்டோம். அரசமைப்புடன் விளையாட எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது. எனவே, உரிய நேரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும். அது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை" - என்றார். (05)

## குளவி கொட்டி பெண் மரணம்

மஸ்கெலியாவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி பேராதனை ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சிவகுமார் அந்தோனி டெரிண்டா (வயது 44) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேற்படி பெண் கடந்த 19 ஆம் திகதி மஸ்கெலியா பெருந்தோட்ட யாக்கத்தின் மஸ்கெலியா கிலண்டில் தோட்ட கிலண்டில் பிரிவில் பணிபுரிந்து கொண்டு இருந்த வேளையில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் டிக்கோயா கிளாங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பேராதனை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார் என்று மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார். (05)

# நாளைய சுகயீன விடுமுறைப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு!

நாளைய சுகயீன விடுமுறைப்போராட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு அதிபர்கள், ஆசிரியர்களுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி. சசிதரன் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில், சம்பள உயர்ச்சிக்காக ஒருநாள் விடுமுறையை அறிவிப்போம். அதிபர்கள் ஆசிரியர்களின் வேதன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக 1998 ஆம் ஆண்டுமுதல் மாறி மாறி வருகின்ற ஆட்சியாளர்களிடம் சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக்கையளித்தோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் தீர்ப்பதாக வாக்குறுதியளித்து பின்னர் ஏமாற்றப்பட்டோம்.

இது காலம் காலமாகத் தொடர்கின்றது. இன்றைய கால கட்டத்தில் வாழ்வதற்குப் போதுமான வருமானமின்றி நாம்ஒவ்வொருவரும் கடனாளிகளாக மாறியுள்ளோம்.

இந்நிலையில் தருவதாக உறுதியளித்த வேதனத்தையாவது தருமாறு இந்த அரசிடம் கேட்கிறோம்.

நீண்டகாலமாகமாணவர்களின்நலன்களிலும், அவர்களின் கல்வியிலும்எத்தகைய பாதிப்புகளும் ஏற்படாதவகையில்எமது அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்துவரும் சேவைக்கு மதிப்பளித்து, சம்பள அதிகரிப்பை வழங்குமாறு நாளை புதன்கிழமை (26) நடைபெறும் ஒருநாள் பணிப்பகிஸ்கரிப்பில் அனைவரும் கலந்துகொள்வோம். இது ஒவ்வொரு அதிபர், ஆசிரியரினதும்தனிப்பட்ட நியாயமான கோரிக்கை. இதனை நாம்அனைவரும்ஒருமித்து, ஒன்றுபட்டு அரசிற்கு எடுத்துரைப்போம் - என்றுள்ளது. (01)




## 2025ம் ஆண்டுமுதல் வாகனங்கள் இறக்குமதி கட்டுப்பாடு நீங்கும்?

2025ஆம் ஆண்டு முதல் வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி எதிர்பார்ப்பதாக அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இன்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (04)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கிழக்கு மாகாண ஏழு துறைகளுக்கான அமைச்சின் செயலாளராக கலாநிதி கோபாலரத்தினம் நியமனம்



(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் வாகன போக்குவரத்து, கட்டிடங்கள் நிருமாணம், வீடமைப்பு, கிராமிய மின் இணைப்பு, நீர் விநியோகம் ஆகிய ஏழு துறைகளுக்கான அமைச்சின் செயலாளராக கலாநிதி மூ.கோபாலரத்தினம் (மூகோ) நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் எம்.செந்தில் தொண்டமான் இந்த நியமனத்தை நேற்று (24) திங்கட்கிழமை அவரது அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளார். ஏனைய செயலாளர்களுக்கும் நியமனக் கடிதங்களை ஆளுநர் வழங்கி வைத்தார்.

இலங்கை நிருவாக சேவை விசேட தர அதிகாரியான கலாநிதி மூ.கோபாலரத்தினம், ஏலவே கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி காணி அபிவிருத்தி திறன் விருத்தி மகளிர் அபிவிருத்தி நீர் விநியோக துறை அமைச்சின் செயலாளராக பணியாற்றி வந்தார்.

அதற்கு முன்னதாக கிழக்கு மாகாண சபையின் பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் பேரவைச் செயலாளராக கடமை புரிந்துவந்தார். அதற்கு முன்னர் திறைசேரி முகாமைத்துவ திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியிருந்தார்.

மட்டக்களப்பு செட்டிபாளையத்தினை பிறப்பிடமாக கொண்ட இவர் 1995 ஆம் ஆண்டு இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக தெரிவுசெய்யப்பட்டார்.

இவர், தம்பலகாமம், ஏறாவூர் நகர் ,பட்டிப்பளை, கல்முனை மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும், குச்சவெளி, நாவிதன்வெளி, திருக்கோயில் மற்றும் களுவாஞ்சிகுடி பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும் பணி யாற்றியிருந்தார்.

# சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கை கழுவுதல் விழிப்புணர்வு நிகழ்வு





(சர்ஜூன் லாபீர்)

கை கழுவுதலின் அவசியத்தினை வலியுறுத்தியும் பொதுமக்களை விழிப்பூட்டும் நோக்கிலும் இம்மாதம் 24 முதல் 29ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பகுதியினை பிராந்திய கை கழுவுதல் விழிப்புணர்வு வாரமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் பிரகடனப்படுத்தப்பட்டதனையடுத்து சம்மாந்துறை பிரதேசத்திலும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக கப்பட்டுள்ளன.

அந்த வகையில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எஸ்.எல் பிர்தௌஸியாவின் ஒருங்கிணைப்பில் இன்று சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.எல்.எம் கபீர் கலந்து கொண்டு விழிப்புணர்வு கருத்தரங்கினை நிகழ்த்தினார்.

இதன்போது சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கை கழுவுதலின் அவசியம் குறித்தும் கை கழுவ வேண்டிய சந்தர்ப்பங்கள் பற்றியும், சுகாதார பழக்கவழக்கங்கள் மற்றும் சுகாதார நடைமுறைகள் சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களை தெளிவுபடுத்தினார்.

இந்நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என்.எம் பஸ்லான், சுகாதார பரிசோதகர்களான எம்.டி நஸார், எம்.ஐ.எம் ஹனீபா ஆகியோரும் கலந்து கொண்டனர்.




# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் வழங்கல்



(ஹஸ்பர் ஏ.எச்)

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு திருகோணமலை ஈச்சலம்பற்று கோட்டத்தில் உள்ள ஏழு பாடசாலைகளைச் சேர்ந்த ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் ஆற்றல் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் நேற்று (24) வழங்கப்பட்டன.

விக்கினேஸ்வரா, புனித சவேரியார் மற்றும் நாமகள் பள்ளிக்கூடங்களில் வைத்து திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் இந்த நூல்கள் மாணவர்களுக்குக் கையளிக்கப்பட்டன.

இந்நூல்களை திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன், செயலாளர் கணபதிப்பிள்ளை சிவானந்தன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.



# அவுஸ்ரேலிய அணியை வீழ்த்தியது இந்தியா! அரையிறுதியில் இங்கிலாந்துடன் மோதல்

நேற்று நடைபெற்ற போட்டியில் அவுஸ்ரேலிய அணியை வீழ்த்தியதன் மூலம் ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு இந்திய அணி தகுதி பெற்றுக்கொண்டது.

சூப்பர் 8 சுற்றில் மேற்கிந்தியத் தீவுகளின் சென்ட் லூசியாவில் நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்பிற்கு 205 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா 92 ஓட்டங்களையும், சூர்யகுமார் யாதவ் 31 ஓட்டங்களையும், ஹர்திக் பாண்டியா ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் எடுத்தனர். அவுஸ்ரேலியா அணியின் மிட்செல் ஸ்டார்க், ஸ்டொய்னிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

206 ஓட்டங்கள் வெற்றியிலக்காக கொண்டு களமிறங்கிய அவுஸ்ரேலியா அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்பிற்கு 181 ஓட்டங்களை பெற்றுத் தோல்வியடைந்தது. ட்ராவிஸ் ஹெட் 76 ஓட்டங்களையும், மிட்செல் மார்ஷ் 37 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இந்திய அணியின் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்டுகளையும், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்திய அணி இந்தப் போட்டியில் 24 ஓட்டங்களினால் வெற்றியீட்டியதுடன் அரையிறுதியில் விளையாடும் வாய்ப்பையும் உறுதிப்படுத்திக்கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா தெரிவு செய்யப்பட்டார்.

சூப்பர் 8 சுற்றில் முதலாவது குழாமில் இடம்பெற்றுள்ள இந்திய அணி பங்குபற்றிய 3 போட்டிகளிலும் வெற்றியீட்டி தரவரிசையில் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இன்று ஆப்கானிஸ்தான் அணி பங்களாதேஷை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்துள்ள நிலையில், இந்திய அணி அரையிறுதியில் இங்கிலாந்தை எதிர்கொள்ளவுள்ளது. (04)



# போரா சமூகத்தின் வருடாந்த மாநாடு இலங்கையில் ஜனாதிபதி அலுவலகத்தில் முக்கிய கலந்துரையாடல்

இலங்கையில் நடைபெறவுள்ள போரா சமூகத்தின் வருடாந்த மாநாட்டை வெற்றியடையச் செய்வதற்கு அதிகபட்ச ஆதரவை வழங்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிமனைப் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்

வருடாந்த போரா மாநாட்டின் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ரத்நாயக்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பாகிஸ்தானின் கராச்சியில் நடைபெறவுள்ள போரா சமூகத்தினரின் ஆன்மீக மாநாட்டுடன் இணைந்து இந்த போரா மாநாடு எதிர்வரும் ஜ/லை 7ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை பம்பலப்பிட்டி போரா வழிபாட்டிடத்திலும் இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டுக்கு இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து சுமார் பதினைந்தாயிரம் போரா சமூகத்தினர் வரவுள்ள நிலையில், அவர்களுக்கான விமான நிலைய வசதிகள் உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் செய்து தருவது குறித்து நீண்ட விவாதம் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (04)

# பங்களாதேஷை வீழ்த்திய ஆப்கானிஸ்தான் அணி அரையிறுதியில் தென்னாபிரிக்காவைச் சந்திக்கிறது!



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் வரலாற்றில் முதல் முறையாக ஆப்கானிஸ்தான் அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. சூப்பர் 8 சுற்றில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான இன்றைய போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் ஆப்கானிஸ்தான் அணி தனது அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்து கொண்டது. இதன் காரணமாக அவுஸ்ரேலியா அணி அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் செனட் வின்சென்டில் இன்று நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துக் களமிறங்கியது.

அந்த அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 115 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. குர்பாஸ் 43 ஓட்டங்களை எடுத்தார். பங்களாதேஷ் அணியின் ரிஷாத் ஹொசைன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறவேண்டுமாயின், 12.1 ஓவர்களில் வெற்றியிலக்கை கடக்க வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 11.4 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 81 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கிட்டது. இதன் காரணமாக போட்டி 19 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு டிஎல்எஸ் விதிப்படி 114 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டன. ஆயினும், ஆப்கானிஸ்தானின் இறுக்கமான பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பில் தடுமாறிய பங்களாதேஷ் அணி 17.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடைந்தது. லிட்டன் தாஸ் ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். ஆப்கானிஸ்தான் அணியின் ரஷித் கான், நவீன் உல் ஹக் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆப்கானிஸ்தான் அணி இந்த போட்டியில் 8 ஓட்டங்களினால் வெற்றியீட்டியதுடன் அரையிறுதிப் போட்டிக்கும் தகுதி பெற்றுக்கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக ஆப்கானிஸ்தான் அணியின் நவீன் உல் ஹக் தெரிவு செய்யப்பட்டார்.

சூப்பர் 8 சுற்றில் முதலாவது குழாமில் இடம்பெற்றுள்ள ஆப்கானிஸ்தான் அணி பங்குபற்றிய 3 போட்டிகளில் 2 இல் வெற்றியீட்டி, புள்ளிப் பட்டியலில் 2 ஆம் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இந்நிலையில், ஒரு போட்டியில் மாத்திரம் வெற்றியீட்டியுள்ள அவுஸ்ரேலியா அணி புள்ளிப் பட்டியலில் மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியுள்ளது.

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு ஆப்கானிஸ்தான், இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து அணிகள் தகுதி பெற்றுள்ளன.

இந்தியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் இதுவரை பங்குபற்றிய ஒரு போட்டியிலும் தோல்வியை எதிர்கொள்ளாமல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

27 ஆம் திகதி நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்கா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளும், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து மற்றும் இந்திய அணிகளும் ஒன்றையொன்று எதிர்கொள்ளவுள்ளன. (04)

# போட்டியினால் போர் வரலாம்! பிரான்ஸ் ஜனாதிபதி எச்சரிப்பு



பிரான்ஸில் உள்நாட்டு யுத்தம் வெடிக்கும் அபாயம் காணப்படுவதாக அந்த நாட்டின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் எச்சரித்துள்ளார்.

பிரான்சில் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வரை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

அந்தத் தேர்தலில் அந்நாட்டின் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தலைமையிலான நஷனல் ரலி கட்சிக்கும், இடதுசாரியான நியூ பப்புலர் முன்னணிக் கூட்டணிக்கும் இடையில் தீவிரமான போட்டி நிலவி வருகின்றது.

இந்நிலையில் தேர்தலை முன்னிட்டு நேற்றைய தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய மக்ரோன், இரு கட்சிகளுக்கும் இடையே காணப்படும் தேர்தல் போட்டியானது உள்நாட்டுப் போர் ஏற்படுவதற்கு வழிவகுக்கும், எனத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை வலதுசாரிகளுக்கே பெரும்பான்மை கிடைக்கும் என்று தேர்தலுக்கு முந்திய கருத்துக்கணிப்புகளில் கூறப்பட்ட நிலையில் வலதுசாரிகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கான பெண்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (04)

# அம்பாறை சமூக சேவையாளர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு

(சியாத்.எம்.இஸ்மாயில், றியாஸ் ஆதம்)

நிந்தவூர் ரோஸ் றீனா நிறுவனத்தின் சமூக சேவைப்பிரிவின் ஏற்பாட்டில் சமூக நலன்புரி அமைப்புக்களின் ஊடாக அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை சமூகத்திற்காக முன்னெடுத்த நலன்புரி அமைப்புக்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நிந்தவூர் அழகாபுரி தனியார் விடுதியில் அண்மையில் இடம்பெற்றது.




ரோஸ் றீனா சமூக சேவைகள் அமைப்பின் ஸ்தாபகரும், முகாமைத்துவப் பணிப்பாளரும், சமூக ஆர்வலருமான ஏ.ஜே.ஜனுபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சின் செயலாளரும், தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினரும், சம்மாந்துறை மஜ்லிஸ் சூரா அமைப்பின் தலைவருமான எம்.ஐ.அமீர் (நழிமி) பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

நிந்தவூர் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர்களான ஏ.எம்.அப்துல் லத்திப், எம்.எம். ஆசிக் மற்றும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை மற்றும் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்திய அத்தியட்சகர்களான டொக்டர் ஏ.எல்.எப். ரஹ்மான், டொக்டர் எம்.பீ.ஏ.அப்துல் வாஜித், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் கே.எல்.எம். ரயிஸ், கல்முனை உதவிக் கல்விப் பணிப்பாளரும் நிந்தவூர் ஜ/ம்மா பள்ளிவாசல் தலைவருமான எம்.ஏ.எம்.றசீன் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

இவ்வமைப்பினால் முதற்கட்டமாக அம்பாறை மாவட்டத்தில் அர்ப்பணிப்பு மிக்க சமூக சேவைகளை முன்னெடுத்த நலன்புரி அமைப்புக்கள், சமூக சேவையாளர்கள் பாராட்டி நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

எதிர்காலத்தில் மேலும் பல சமூக சேவை அமைப்புக்கள் அமைப்பின் பிரதிநிதிகள் இவ்வமைப்பினால் பாராட்டி கௌரவிக்கப்பட உள்ளதோடு, சமூகப் பரப்பில் காணப்படுகின்ற சமூக விரோத செயற்பாடுகளை களைவதற்கும் சிறுவர்கள், இளைஞர்கள் செல்லுகின்ற பாதையினை ஒழுங்கமைப்பதற்குமான பணியில் ரோஸ் றீனா சமூக சேவை பிரிவு போன்று அனைத்து சமூக சேவை அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்படுவதற்கான அழைப்பினை ரோஸ் றீனா சமூக சேவை அமைப்பின் ஸ்தாபகர் சமூக ஆர்வலர் ஏ.ஜே.ஜனுபர் விடுத்திருந்தார்.

## சாய்ந்தமருது ஹிஜ்ரா பள்ளிவாசல் மத்ரஸாவில் ஹிப்ளு பிரிவு ஆரம்பம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பொலிவேரியன் ஹிஜ்ரா பள்ளிவாசலில் இயங்கி வருகின்ற அல்குர்ஆன் மதரஸாவில் குர்ஆனை மனனமிடும் ஹிப்ளு மற்றும் ஷரீஆ பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (24) பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவரும் முன்னாள் பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம். சலீம் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இந்த மத்ரஸாவில் இணைந்து கொண்ட மாணவர்களின் பெற்றோர்களிடம் விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பள்ளிவாசல் இமாம் மற்றும் நிருவாக சபை உறுப்பினர்களும் நலன் விரும்பிகளும் பங்கேற்றிருந்தனர்.

இங்கு அல்குர்ஆனை பார்த்து ஓதுதலுக்கு மேலதிகமாக அல்குர்ஆனை மனனம் இடுதல் மற்றும் ஷரீஆ வகுப்புக்களும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஹிஜ்ரா பள்ளிவாசலானது கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களில் காவு கொள்ளப்பட்டு உயிர் நீத்த சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட சுகதாக்களின் நினைவாக உருவாக்கப்பட்ட சுனாமி மீள்குடியேற்ற கிராமமான பொலிவேரியன் கிராமத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## உலமாக்களுக்கான ஹஜ் பெருநாள் ஒன்றுகூடல்




(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ், )

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் புத்தளம் நகரக் கிளை ஏற்பாடு செய்த உலமாக்களுக்கான ஹஜ் பெருநாள் சிநேகபூர்வமான சந்திப்பு ஞாயிற்றுக்கிழமை (23) இஷா தொழுகையுடன் புத்தளம் முஹைத்தீன் ஜ/ம்ஆ பள்ளிவாசலில் (பெரியப்பள்ளி) ஜம்இய்யத்துல் உலமாவின் புத்தளம் நகரக் கிளையின் தலைவர் அஷ்ஷேக் ஜிப்னாஸ் அல் மிஸ்பாஹி தலைமையில் நடைபெற்றது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் மாவட்டத்தின் முன்னால் தலைவர் அஷ்ஷேக் அப்துல்லாஹ் ஹஸரத் மூலமாக உலமாக்களின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் சில விடயங்கள் ஞாபகப்படுத்தப்பட்டதுடன் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் மாவட்டம் தலைவர் அஷ்ஷேக் தமீம் ரஹ்மானி ஜம்இய்யத்துல் உலமா சபையின் முக்கியத்துவம் பற்றி தெளிவுப்படுத்தப்பட்டு உலமாக்களுக்களுக்கிடையில் கருத்து பரிமாற்றல்களும் இடம்பெற்றன.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா புத்தளம் நகரக் கிளையின் உப தலைவர் அஷ்ஷேக் ஸவ்கி பஹ்ஜீயின் நன்றி உரையுடன் ஒருவருக்கு ஒருவர் முஸபஹா முஆனகா செய்து கப்பாரத்துல் மஜ்லிஸ் துஆவுடன் ஒன்றுகூடல் நிறைவு பெற்றது

# உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை வடக்கு தொழில் துறை சம்மேளனத்துடன் கனேடிய தமிழர் பேரவை புரிந்துணர்வு ஒப்பந்தம்

கனேடிய தமிழர் பேரவை (ஊவுஊ) உள்ளூர் தயாரிப்புகளை மேம்படுத்துவதற்காக இலங்கையில் வடக்கு தொழில்துறை சம்மேளனத்துடன் (ஊஐ) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

இது தொடர்பாக கனேடிய தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடக்கு கைத்தொழில் சம்மேளனத்துடன் மேற் கொள்ளப்பட்டுள்ள இந்த மூலோபாய கூட்டாண்மையானது இலங்கையில் இருந்து, குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு பிராந்தியங்களில் இருந்து உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவித்து, கனேடிய சந்தைக்கு அறிமுகப்படுத்துவதை நோக்கமாகக் கொண டுள்ளது.

இந்த ஆண்டு தொடக்கத்தில் கனேடிய தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்த போது இந்த முயற்சிக்கான அடித்தளம் போடப்பட்டது. இந்த விஜயத்தின் போது, உள்ளூர் உற்பத்தியாளர்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட சாத்தியமான கூட்டாண்மை பற்றி தெரிந்துகொள்ள வடக்கு தொழில்துறையின் பிரதிநிதிகளை நாங்கள் சந்தித்திருந்தோம். அதன் அடுத்தகட்டமாகவே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.




இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ், உள்ளூர் தயாரிப்புகளை கனடாவில் கனேடிய தமிழர் பேரவை அதன் பல்வேறு நிகழ்வுகள் மூலம் ஊக்குவிக்க முன்வந்துள்ளது. இதில் மிகப்பெரிய வருடாந்திர தெரு திருவிழாவான தமிழர் தெருவிழாவும் அடங்கும். தமிழ் சமூகம் மற்றும் கனடாவில் உள்ள பரந்த பொதுமக்களுக்கு எம் தாயக தயாரிப்புகளை முன்னிலைப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் கனேடிய தமிழர் பேரவை அதன் தளங்களையும் வளங்களையும் முழுமையாக பயன்படுத்தவுள்ளது.

இம்முயற்சியானது தாயக தயாரிப்புகளுக்கு பரந்த சந்தையை உருவாக்குவது மட்டுமன்றி போரினால் பாதிக்கப்பட்ட இந்தப் பிரதேசங்களின் நிலையான அபிவிருத்திக்கும் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தயாரிப்புகளை உலக சந்தையில் அறிமுகப்படுத்துவதன் மூலம், வடக்கில் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மையை வளர்ப்பதை கனேடிய தமிழர் பேரவை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது உள்ளூர் தொழில்கள் மற்றும் சமூகங்களுக்கு மிகவும் தேவையான ஊக்கத்தை அளிக்கும்.

இந்த முயற்சியை நேரடியாக அனுபவிப்பதற்கும் ஆதரவளிப்பதற்கும், ஓகஸ்ட் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் மார்க்கம் வீதியில் இடம்பெறவுள்ள தமிழர் தெருவிழாவுக்கு வருகை தருமாறு அன்போடு அனைவரையும் அழைக்கின்றோம். தாயகத்தில் இருந்து நம்மூர் தயாரிப்புக்களைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவும், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் இது ஒரு தனித்துவமான வாய்ப்பாகும்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது தமிழ் சமூகத்திற்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஆதரவளிப்பதற்கான கனேடிய தமிழர் பேரவை இன் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம்!

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றினை இன்று முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டம் இன்று காலை 10 மணியளவில் கந்தசுவாமி ஆலய முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “சர்வதேச விசாரணையே தேவை!, இழப்பீடுகள் வேண்டாம்!, எமக்கு பிள்ளைகள் வேண்டும்!” போன்ற போன்ற கோசங்களை எழுப்பியும், பதாகைகளை ஏந்தியவாறும் போராட்டத்தை நடத்தியிருந்தனர்.










## யாழில் உணவு நிலையங்களுக்கு சீல் சுகாதாரச் சீர்கேட்டால் நடவடிக்கை

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வண்ணார்பண்ணை, நல்லூர்பகுதி பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் தி. கிருபன், பு.ஆறுமுகதாசன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினால் கடந்த 19 ஆம் திகதி உணவு உற்பத்தி நிலையங்கள், உணவகங்கள் போன்றன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய ஓர் உணவு உற்பத்தி நிலையமும் மூன்று உணவகங்களும் இனங்காணப்பட்டன. குறித்த உணவு கையாளும் நிலையங்களிற்கு எதிராக மாநகரசபை பொது சுகாதார பரிசோதகர்களால் யாழ் மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

வழக்குகளை இன்றைய தினமே விசாரணைக்கு எடுத்து கொண்ட நீதவான் ஏ. ஏ. ஆனந்தராஜா குறித்த உணவு கையாளும் நிலையங்கள் அனைத்தையும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகர்களுக்குக் கட்டளை வழங்கினார்.

இதனையடுத்து மாநகர பொதுச் சுகாதார பரிசோதகர்களால் குறித்த உணவு கையாளும் நிலையங்கள் சீல் வைத்து மூடப்பட்டன. (01)

## செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் மிக்ஸருக்குள் பொரித்த பல்லி!

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் விற்கப்பட்ட மிக்ஸருக்குக் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது.

சந்நிதி ஆலயத்தில்நேற்றைய தினம் திங்கட்கிழமை இரவு ஆனிப்பொங்கல் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதன்போது ஆலயத்திற்கு பெருமளவானபக்தர்கள்வருகை தந்திருந்தனர்.

அந்நிலையில் ஆலயத்திற்கு வருகை தந்த ஒருவர், ஆலயச் சூழலில் உள்ள இனிப்புக் கடை ஒன்றில் மிக்ஸரை வாங்கிய போது, அதனுள் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது. அது தொடர்பில் அப்பகுதிப் பொதுச் சுகா தாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பல்லியுடன் காணப்பட்ட மிக்ஸரை சான்றுப் பொருளாகப் பெற்றுக் கொண்ட பொதுச் சுகாதார பரிசோத கர் ,குறித்த இனிப்பு கடைக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். குறித்த வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (01)





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2024இல் வெளியிடப்பெற்றது.